JUICE-2012

# PROCEEDINGS

## Jaffna University International Research Conference - 2012

"Capacity Development in a Post-war Context"

Editors:
A. Ramanan and B. Nimalathasan

Jaffna University International Research Conference 2012 (JUICE-2012)
ISBN: 955058503-4

## Manuscripts

- Received : May 2013
- Revised : August 2013
- Accepted : October 2013
- Published : March 2014

## Editorial Board

**Editor-in-Chief:** Prof. S. Srisatkunarajah

**Editors:** Dr. A. Ramanan and Dr. B. Nimalathasan

**Associate Editors:**

- Dr. (Ms.) J. Sinniah, Agriculture
- Dr. E. Y. A. Charles, Applied Sciences and Technology
- Mrs. R. Yogendrarajah, Commerce and Management
- Dr. (Mrs.) A. Sathiaseelan, Education
- Dr. A. Murugananthan, Health and Medical Sciences
- Mr. E. Cumaran, Humanities and Fine Arts
- Dr. P. Abiman, Pure Sciences
- Ms. L.D. Rajasooriyar, Social Sciences

**Technical Assistant:** Mr. S. Gobinath

## Disclaimer

The full papers in this proceeding have been submitted by authors and the views expressed remain the responsibility of the named authors. The statements and opinions stated in these publications do not necessarily represent the views of the Editorial Board of the Jaffna University International Research Conference 2012.

©JUICE-2012, University of Jaffna, Sri Lanka

URL: www.jfn.ac.lk/juice2012

Printed by: Harikanan (Pvt) Ltd., No. 681, K.K.S. Road, Jaffna, Sri Lanka

# சமூகக் கட்டமைப்பில் அன்றும், இன்றும் இஸ்லாமியர்களின் வகிபாகம்: ஒரு வரலாற்று நோக்கு

க. அருந்தவராஜா
வரலாற்றுத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
arunn.msu@gmail.com

**ஆய்வுச்சுருக்கம்:** பல்லினச் சமூகத்தினை உள்ளடக்கியிருக்கின்ற யாழ்ப்பாணப் பிரதேசத்தில் இஸ்லாமிய மக்களுக்கென அச்சமூகத்தில் தனியான சிறப்பும் அவர்களுக்கென நீண்டதொரு வரலாற்றுப் பாம்பரியமும் உண்டென்பதனை எவரும் மறுப்பதற்கில்லை. யாழ்ப்பாணத்தில் இவர்களது ஆரம்பகாலக் குடியேற்றந் தொடர்பாகப் பலதரப்பட்ட செய்திகள் காணப்பட்டபோதும் யாழ்ப்பாணத் தமிழரசர்களின் காலத்துடன்தான் இவர்களது ஆரம்பகாலக் குடியேற்றங்கள் யாழ்ப்பாணப் பிரதேசத்தில் நல்லூரினை அண்டிய பகுதிகளில் ஏற்பட்டமைக்கான அதிகளவு சான்றுகள் கிடைத்துள்ளன. இக்காலத்தில் தோன்றிய இலக்கியங்கள், மற்றும் போர்த்துக்கேய ஆவணங்களில் காணப்படுகின்ற குறிப்புக்கள் இவற்றினை நிரூபிக்கும் வகையில் அமைந்துள்ளன. இருப்பினும் யாழ்ப்பாணத்துக்கும் இஸ்லாமியர்களுக்குமிடையிலான தொடர்புகள் ஏறத்தாள கி.பி. 8ஆம் நூற்றாண்டிலிருந்தே இடம்பெற்றுவந்தமை குறிப்பிடத்தக்கது. இவ்வாறு யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த இஸ்லாமியர்கள், போர்த்துக்கேயர்கள் மற்றும் டச்சுக்காரர்கள் தொடர்ந்து வந்த ஆங்கிலேயர்களது ஆட்சிக்காலங்களிலும் சுதந்திரத்தின் பின்பாகவும் பல்வேறு சவால்களுக்கு முகங்கொடுத்து வந்தபோதும் கூட யாழ்ப்பாணத்தில் மட்டுமன்றி இலங்கை முழுவதிலும் தங்களுக்கேயுரிய தனித் துவமான சமூக, பொருளாதார, பண்பாட்டு அடையாளங்களைப் பின்பற்றி வந்தவர்களாகவே இன்றுவரை காணப்படுகின்றனர். இத்தகைய சிறப்புக்களுடன் வாழ்ந்த இவர்கள் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையின் காரணமாக 1990இன் இறுதியில் யாழ்ப்பாணத்தினைவிட்டு இலங்கையின் பிறபகுதிகளுக்கு இடம் பெயரவேண்டிய கட்டாய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டனர். இருப்பினும் பலவருட இடைவெளியின் பின்பாக நாட்டில் ஏற்பட்ட சுமூகநிலையினைத் தொடர்ந்து இன்று மீளவும் யாழ்ப்பாணத்தில் தாங்கள் வசித்த சொந்த இடங்களில் படிப்படியாக மீளக்குடியேறி வருகின்றனர்.

**திறவுச்சொற்கள்:** ஆரம்பகாலக் குடியேற்றங்கள், தனித்துவமான அடையாளங்கள், தமிழ்–முஸ்லிம் உறவு, யாழ்ப்பாணத்தரசர்கள், இடப்பெயர்வு, மீள்குடியேற்றம்.

## I. அறிமுகம்

இலங்கையின் மூன்றாவது பெரும்பான்மை இனத்தவராகிய முஸ்லிம் மக்கள் அராபியர்களது வழித்தோன்றலென்றாலும் இவர்களில் பலர் காலப்போக்கில் பல தேசங்களிலிருந்தும் வந்து குடியேறியவர்களாகக் காணப்படுகின்றனர் [8]. இவர்களில் பெரும்பாலான முஸ்லிம் மக்கள் பின்னாளில் பிரதான மொழியாகத் தமிழை ஏற்றுக்கொண்டதுடன் தமிழ் கலாசாரத்தில் ஆழ்ந்தும் போயினர். இத்தகைய இஸ்லாமியர்கள் ஏறத்தாள ஒரு நூற்றாண்டுக்கு முன்பாகவே இலங்கையில் தங்களது பூர்வீகம் தொடர்பான தேடலை ஆரம்பித்து விட்டனரெனலாம் [15]. இஸ்லாமியமதம் கி.பி. ஏழாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் தோற்றம்பெற்றதெனக் கூறப்படுவதனால் இலங்கையில் இஸ்லாமிய மக்களது வரலாறும் இக்காலத்திற்கு பிற்பட்டதென்பது பலரது கருத்து. அதேநேரத்தில் இம் மதத்தினது தோற்றத்தின் முன்னதாக அராபியர்கள் இலங்கையுடன் தொடர்புகள் கொண்டிருந்தார்கள் என்ற கருத்தினையும் முற்றாக மறுத்துவிடவும் முடியாது [14].

இலங்கையிலுள்ள இஸ்லாமிய மக்கள் தங்களது ஆரம்பகால வரலாற்றினைத் தெரிந்துகொள்வதற்கு பின்வந்தவர்களுக்கு எந்தவிதமான இலக்கிய சான்றுகளையும் விட்டுச்செல்லவில்லை. இவர்களது குடியேற்றங்கள் தொடர்பாகக் கர்ணபரம்பரைக் கதைகளே அதிகளவில் காணப்படுகின்றன [10]. இலங்கையில் உள்ள அரபுமொழிச் சாசனங்களில் காணப்படுகின்ற செய்திகள் குறைவென்றாலும் இவற்றின் மூலமாக இஸ்லாமியர்கள் இலங்கையுடன் கொண்டிருந்த தொடர்புகள் பற்றி ஓரளவுக்கு அறிந்துகொள்ள முடிகின்றது. அதுவும் இவை பெருமளவுக்கு கி.பி 10–15ஆம் நூற்றாண்டுகளுக்கு இடைப்பட்டவையாகவே காணப்படுகின்றன. இவற்றிலிருந்து இலங்கையில் வணிகத்தொடர்பினை ஆரம்பத்தில் ஏற்படுத்தியவர்கள் அராபியர்கள் எனவும் காலப்போக்கில் பலதேசத்தவர்கள் இங்குவந்து

வணிகத்தில் பங்குகொண்டதனையும் 14ஆம் நூற்றாண்டிலிருந்து இலங்கையின் வர்த்தகத்தில் தென்னிந்தியத் தொடர்புடைய முஸ்லிம் மக்களது செல்வாக்கு அதிகரித்துக் கொண்டமையினையும் அறிந்துகொள்ள முடிகின்றது [10]. மேலும் அக்காலப்பகுதியில் இலங்கையின் வர்த்தகத்தில் முஸ்லிம் மக்கள் பிரதான இடத்தினை வகித்திருந்தமையினை 1344இல் இலங்கை வந்த இபன்பட்டுடாவின் குறிப்புக்களிலிருந்தும் அறிந்துகொள்ள முடிகின்றது. அவற்றில் காலித்துறைமுகத்தில் முஸ்லிம்களது வர்த்தகக் கப்பல்கள் நின்றதையும் அச்சமயத்தில் சிங்கள இராசதானியின் சுற்றுப்புறத்தில் காணப்பட்ட பள்ளிவாசல்கள் பற்றியும் அவர் குறிப்பிடுகின்றார் [10].

இலங்கையில் அராபியர்கள் முதலில் குடியேறி வாழ்ந்த பகுதிகள் தமிழர்கள் அதிகளவில் வாழ்ந்த வடபகுதிதான் என்பதனை அவர்கள் பேசுகின்ற தமிழ்மொழியும் அவர்கள் பின்பற்றுகின்ற பண்பாட்டு அம்சங்களும் புலப்படுத்துகின்றன [3] என்ற ஒரு சிலரது கருத்தினை நிரூபிப்பதற்குப் போதிய சான்றுகள் இல்லை. காரணம் இலங்கையில் முதலில் எக்காலப்பகுதியில் எப்பகுதிகளில் இவர்களது குடியேற்றங்கள் இடம்பெற்றன என்பது தொடர்பாகவும் ஆய்வாளர்களிடையிலே கருத்து வேறுபாடுகள் காணப்படுகின்றன. 13ஆம் நூற்றாண்டளவில் யாழ்ப்பாணத்தில் மிருசுவில், சாவகச்சேரி, கொடிகாமம், எழுதுமட்டுவாள், நல்லூர், போன்ற பகுதிகளில் இவர்களது ஆரம்பகாலக் குடியிருப்புக்கள் காணப்பட்டன [7]. இவற்றினைவிட அலுப்பாந்தி, பருத்தித்துறை, ஆனைக்கோட்டை போன்ற பகுதிகளிலும் யாழ்ப்பாணத்துக்கு வெளியே கிளிநொச்சி மற்றும் பள்ளிக்குடா போன்ற பல பிரதேசங்களிலும் அதிகளவில் இவர்களது குடியேற்றங்கள் காணப்பட்டமை அவதானிக்கத்தக்கது.

ஐரோப்பியர்களின் வருகைக்கு முன்னதான காலப்பகுதியில் நாட்டின் உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தக நடவடிக்கைகள் பெருமளவுக்கு இவர்களது கைகளிலேயே காணப்பட்டன. இவர்கள் யாழ்ப்பாண அரசர்களின் அந்தரங்கச் செயலாளராகவும் வைத்தியர்களாகவும்கூட இருந்துள்ளனர். அந்தவகையில் அந்நியநாட்டவர்கள் யாழ்ப்பாணத்துக்கு வருவதற்கு முன்னரே தமிழர்கள், முஸ்லிம்கள் ஆகிய இரு வகுப்பினர்களும் மத, மொழி வேறுபாடுகளின்றி ஒற்றுமையுடன் வாழ்ந்திருந்ததிலிருந்து வரலாற்றுரீதியாகவே இத்தகைய உறவு நீடித்திருந்தமையினை நாம் உணர்ந்துகொள்ள முடிகின்றது. திருமணச் சடங்கில்கூட யாழ்ப்பாண இஸ்லாமியர்கள் தமிழர்களது சில சடங்குமுறைகளையும் பின்பற்றினர் [12]. இவர்களது நாளாந்த வாழ்க்கைமுறையில்கூட ஒருவரை நம்பி ஒருவர் இருந்தனர். ஐரோப்பியர்கள் தங்களது கல்விமுறையினை இலங்கையில் அறிமுகப்படுத்துவதற்கு முன்னதான காலப்பகுதியில் முஸ்லிம் மக்களின் மதராஸாக்களும் தமிழர்களின் திண்ணைப்பள்ளிக்கூடங்களுமே இரு சமூகத்தவர்களதும் முக்கியமான கல்விக்கூடங்களாகக் காணப்பட்டன.

## II. ஆய்வு முறையியல்

இவ்வாய்வுக்கட்டுரையானது, யாழ்ப்பாணத்தில் ஆரம்பகால இஸ்லாமியர்களது குடியேற்றங்கள் தொடர்பாகவும் யாழ்ப்பாணத்தினைவிட்டு இடம்பெயர்ந்து செல்வதற்கு முன்னதாக நீண்டதொரு வரலாற்றினைக்கொண்ட அவர்கள் அக்காலப்பகுதியில் தங்களது பகுதிகளில் மேற்கொண்டுவந்த அரசியல், சமூக, பொருளாதார, பண்பாட்டு நடவடிக்கைகள் பற்றியும் இன்று மீளக்குடியமர்ந்து வருவதன் பின்பாக மேற்கூறப்பட்ட அத்தகைய அவர்களது நடவடிக்கைகள் பற்றியும் இவ்விரண்டு காலப்பகுதிகளுக்கிடையில் இவற்றில் ஏற்பட்ட மாற்றங்கள் தொடர்பாகவும் இவ்விருகாலப் பகுதிகளுக்கிடையில் யாழ்ப்பாணத் தமிழ்ச்சமூகத்துடன் அவர்களுக்கிருந்துவந்த, வருகின்ற உறவுநிலை பற்றியும் ஒப்பிட்டு ஆவணப்படுத்துவதனை நோக்கமாக்கொண்டுள்ளது. இவை எல்லாவற்றினையும்விட இப்பகுதி தொடர்பாக இதுவரை எவரும் ஆய்வு செய்யாத குறைபாட்டினையும் இது நிவர்த்தி செய்யுமென்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. ஆய்வின் அணுகுமுறையானது வரலாறு மற்றும் சமூக அடிப்படையில் அமைந்துள்ளது. ஆரம்பகால இஸ்லாமியர்களின் நடவடிக்கைகள் தொடர்பாகவும் பின்னர் தொடர்ந்து வந்த ஐரோப்பியர்களின் காலத்தில் யாழ்ப்பாணத்தில் இவர்களது செயற்பாடுகள் மற்றும் வகிபாகந் தொடர்பாக முதற்றரச்சான்றுகள் பெருமளவிற்குக் காணப்படாத சூழலில் போர்த்துக்கேயர், ஒல்லாந்தரது காலங்களில் தோன்றிய இலக்கியங்களையே முதற்சான்றுகளாகக் கொள்ளவேண்டியுள்ளது. பிற்பட்ட காலங்களிலும் சமகாலத்திலும் இவற்றினை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட இலக்கியங்கள், நேர்காணல்கள், அவதானிப்புக்கள் என்பனவெல்லாம் இரண்டாந்தரச் சான்றுகளாகக் கொள்ளப்படுகின்றன.

## III. ஆய்வின் மையம்

### 3.1. போர்த்துக்கேயர்களது காலம் (கி.பி. 1505–1658)

இலங்கையில் போர்த்துக்கேயர்களது செல்வாக்கு ஏற்பட்ட காலந்தொடக்கம் முஸ்லிம் மக்களது வாழ்க்கையில் இருண்டகாலப்பகுதி ஆரம்பித்ததெனலாம். அதுவரை காலமும் அராபியர்களின் கைகளிலிருந்த வர்த்தகம் போர்த்துக்கேயர்களது கைகளுக்குச் சென்றது. இத்தகையதொரு பின்னணியில் போர்த்துக்கேயர்கள் நாட்டுக்குள் நுழைவதனை எதிர்த்த முதல் பிரிவினர்களாக இவர்களைக்கொள்ளலாம். தென்னிலங்கையில் மாயாதுன்னையும் அவனது மகனும் இதேகொள்கையினையே போர்த்துக்கேயர்களுக்கெதிராகப் பின்பற்றியதனால் முஸ்லிம் மக்களும் இவர்களுடன் இணைந்து அப்பகுதிகளில் போர்த்துக்கேயர்களுக்கெதிராகப் போராடினர் [13]. போர்த்துக்கேயர்களைப் பொறுத்தவரை யாழ்ப்பாணம் அவர்களது நேரடியான கட்டுப்பாட்டின்கீழ் ஏறத்தாள 39 வருடங்களே காணப்பட்டதனால் பிற பகுதிகளில் ஏற்பட்ட தொல்லைகள் போன்று இஸ்லாமியர்களுக்கு இப்பகுதிகளில் நீண்டகாலத்திற்கு அவர்களால் ஏற்படவில்லை. இருப்பினும் அவ்வப்போது போர்த்துக்கேயர்கள் யாழ்ப்பாணத்தின்மீது மேற்கொண்ட தாக்குதல்களின்போது தமிழர்களது சொத்துக்களுடன்கூடவே இஸ்லாமியர்களது சொத்துக்களும் அழிக்கப்பட்டன.

போர்த்துக்கேயர்களது மதமாற்ற நடவடிக்கையில் ஒரு முஸ்லிமாவது கத்தோலிக்க சமயத்துக்கு மாறியதாகத் தெரியவில்லை [5]. அதுமட்டுமன்றி அவர்கள் கத்தோலிக்க மதக்கல்வியினை ஏற்றுக் கொள்ளவுமில்லை. இதனால் கத்தோலிக்கப் பாதிரிமார்களது எண்ணத்தில் முஸ்லிம் மக்கள் மதவெறியர்களாக வர்ணிக்கப்பட்டனர். அந்தவகையில் போர்த்துக்கேய ஆட்சியாளர்கள் இஸ்லாமிய மக்களின்மீது அதிக காழ்ப்புணர்ச்சியினைக் காட்டுவதற்கு இவர்களும் ஒரு காரணமாக இருந்தனர் [1]. இதனால் அக்காலப்பகுதியில் முஸ்லிம் மக்களது இரண்டாவது பெரிய குடியிருப்பாகக் காணப்பட்ட தென்மிருசுவிலில் இருந்த முஸ்லிம் மக்களும் பூநகரி போன்ற இடங்களுக்கு இடம்பெயர்ந்தனர் [1]. இலங்கைக்கும் தென்னிந்தியாவுக்கும் இடையிலான வர்த்தகமானது போர்த்துக்கேயர்களின் வருகைக்கு முன்னதாக, ஏற்கனவே குறிப்பிட்டதுபோல் தென்னிந்தியாவுடன் தொடர்புடைய முஸ்லிம்களிடமே காணப்பட்டது. அவர்கள் பாக்கு, தும்பு, கயிறு, வாசனைப் பொருட்களை இலங்கையிலிருந்து கொண்டு சென்றதுடன் துணிவகைகள், அரிசி, கருவாடு என்பனவற்றினை இறக்குமதியும் செய்தனர் [10]. இவர்கள் இலங்கைப் பெண்களைத் திருமணம் செய்துகொண்டதுடன் பெருமளவு சொத்துக்களையும் யாழ்ப்பாணத்தில் வைத்திருந்தனர் [11]. போர்த்துக்கேயர்களது காலத்தில் நெசவுத்தொழில், முத்துக்குளித்தல், யானை பிடித்தல் மரவேலைத் தொழில்களை மேற்கொண்டவர்கள் பலரும் யாழ்ப்பாணத்து முஸ்லிம்களாகவே காணப்பட்டனர்.

### 3.2. ஒல்லாந்தர்களது காலம் (கி.பி. 1658–1796)

ஒல்லாந்தர்களது ஆட்சியில் இஸ்லாமியர்கள் தங்களது மார்க்கநெறிகளைச் சரிவரக் கடைப்பிடிக்க முடியவில்லை. தாடிவளர்த்தல் மற்றும் செருப்பு அணிவதற்கு இவர்கள் வரிகளைச் செலுத்த வேண்டியேற்பட்டது. ஆரம்பத்தில் யாழ்ப்பாணம், கொழும்பு, காலி, மாத்தறை போன்ற பிரதேசங்களில் இஸ்லாமியர்கள் வசிப்பதற்குத் தடைகள் போடப்பட்டன. இத்தகைய கட்டுப்பாடுகளின் மூலமாக முஸ்லிம் மக்களிடமிருந்த வியாபாரத்தினைக் கைப்பற்றிக்கொள்வதே ஒல்லாந்தர்களது நோக்கமாகக் காணப்பட்டது [7]. அக்காலப்பகுதியில் இஸ்லாமியர்களது குடியேற்றங்கள் உசன், சாவகச்சேரி, நல்லூர் போன்ற பகுதிகளில் அதிகளவில் காணப்பட்டன. மேலும் அக்காலப்பகுதியில் இவர்கள் தங்கள் பகுதிகளிலுள்ள சந்தைகளில் வியாபார நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுவந்தனர் [7].

இக்காலப்பகுதியில் சாதியமைப்பானது யாழ்ப்பாணத்தில் மிகவும் இறுக்கமான முறையில் கடைப்பிடிக்கப்பட்டு வந்தது [3]. சாதிக்கொரு வீதிகள் காணப்பட்டதனை அக்காலச் சான்றுகள் தெளிவாக உணர்த்தி நிற்கின்றன. அக்காலப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த இஸ்லாமிய மக்கள், தமிழர்கள் மத்தியில் தாழ்ந்த சாதியினராகக் கருதப்பட்டவர்கள் செய்த எந்தவொரு தொழிலையும் செய்தமைக்குச் சான்றுகள் கிடைக்கவில்லை. இது அவர்கள் அக்காலப்பகுதியில் மேலான இனத்தவர்களாகக் கருதப்பட்ட நிலையினை உணர்த்துகின்றது [6]. மேலும் இது இஸ்லாமியர்களின் மீதான தமிழ்ப் பண்பாட்டின் செல்வாக்கினையே காட்டுகின்றது.

யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த வைத்திலிங்கச்செட்டியாரும் முகமதுதம்பி மரைக்காயர் என்பவரும் சமகாலத்தில் நல்ல நண்பர்களாக விளங்கியிருந்தனர். இவர்கள் இருவரினதும் முயற்சியாலேயே யாழ்ப்பாணத்தில் ஒரு சிவன்கோவிலும் இரு பள்ளிவாசல்களும் அமைக்கப்பட்டன [10]. ஒல்லாந்தர்களின் காலத்தில் ஏராளமான இஸ்லாமியப் பிள்ளைகள் இந்துக்களால் அமைக்கப்பட்ட பாடசாலைகளில் கல்விபயின்று வந்தனர். இக்காலப்பகுதியில் ஒல்லாந்தர்களால் அமைக்கப்பட்ட பாடசாலைகளில் இவர்கள் தங்கள் குழந்தைகளைச் சேர்ப்பதற்கு முன்வரவில்லையென்பது குறிப்பிடத்தக்கது. அதேநேரத்தில் சமகாலத்தில் இந்துக்களில் பலர் புரட்டஸ்தாந்து மதம் மாறிக் கொண்டதுடன் அதன்மூலமாகச் சலுகைகளைப் பெற்று அவர்களது பாடசாலைகளில் தங்களது குழந்தைகளையும் சேர்த்துக் கொண்டமையும் இவ்விடத்தில் குறிப்பிடத்தக்கது [10].

அக்காலப்பகுதியில் வன்னிப் பகுதியூடாகவும் யாழ்ப்பாணத்தில் காணப்பட்ட துறைமுகங்களுடாகவும் கண்டி மற்றும் தென்னிந்தியப் பகுதிகளுடன் வர்த்தகம் மேற்கொள்வதில் இஸ்லாமியர்களது பங்கானது குறிப்பிடத்தக்கவகையில் அமைந்திருந்தது. யாழ்ப்பாணத்திலிருந்த முஸ்லிம் வியாபாரிகள் கண்டியுடன் வர்த்தகத்தில் பங்குகொண்டமைக்கான குறிப்புக்கள் காணப்படுகின்றன. யாழ்ப்பாணத்துக்குப் பொதிமாடுகளுடன் சென்று வியாபாரம் மேற்கொள்கின்ற முஸ்லிம் மக்களுக்கு வரிச்சலுகை வழங்கப்பட வேண்டுமெனக் கண்டிப் பிரதானியொருவன் கி.பி. 1699இல் யாழ்ப்பாணத்திலிருந்த கொமாண்டருக்கு மடலொன்றினையும் வரைந்திருந்தான். ஒல்லாந்தர்களது ஆவணங்களில் முஸ்லிம் மக்கள் கப்பல் சொந்தக்காரர்களாகக் காணப்பட்டமை தொடர்பான குறிப்புக்கள் சில காணப்படுவதாகப் பேராசிரியர் சி. பத்மநாதன் கூறுகின்றார் [4].

ஒல்லாந்தர்களின் காலத்தில் தையல்வேலைகளிலும் யாழ்ப்பாணத்தில் ஒருசில முஸ்லிம் மக்கள் ஈடுபட்டிருந்தனர். இங்கிருந்த முஸ்லிம் மக்கள் அதிகாரிவரி, தலைவரி போன்றவற்றினை அரசாங்கத்துக்குச் செலுத்தி வந்ததுடன் ஒல்லாந்தர்களுக்கு ஊழியமும் செய்ய வேண்டியிருந்தது. இவர்கள் விவசாயம் மற்றும் பல்வேறு தொழில் முயற்சிகளிலும் ஈடுபட்டு வந்தனர். சிலர் குத்தகைக்காரர்களாகவும் பணியாற்றியிருந்தனர். 1792இல் யாழ்ப்பாணத்தில் சாயவேர் தொடர்பான குத்தகை சேகுநயினாபிள்ளை என்பவரிடம் கொடுக்கப்பட்டிருந்தது. 1791இல் நெல்வரி தொடர்பான குத்தகை வண்ணார்பண்ணையைச் சேர்ந்த முஸ்லிம் ஒருவருக்கு வழங்கப்பட்டது. மன்னாரில் சுங்கவரியினைச் சேகரிக்கின்ற பொறுப்பு வண்ணார்பண்ணையைச் சேர்ந்த மன்னன்மாப்பிள்ளை மாலிநயினார் என்பவரது பொறுப்பில் விடப்பட்டது [9]. மேலும் இவர்களது காலத்தில் யாழ்ப்பாணத்திலிருந்த விவசாயிகள் மலையாளப்புகையிலை வியாபாரத்தின் மூலமாக அதிகளவான இலாபத்தினை உழைத்தனர். முஸ்லிம் வியாபாரிகள்தான் தமிழர்களிடமிருந்து இவற்றினை அதிகளவில் கொள்வனவுசெய்து தென்னிந்தியாவுக்குக் கொண்டு சென்று விற்பனை செய்து வந்தனரென்பது அவதானிக்கத்தக்கது [8].

### 3.3. ஆங்கிலேயர்களது காலம் (கி.பி. 1796–1948)

இக்காலப்பகுதியில் முஸ்லிம் மக்கள் அரசியலில் தங்களை இணைத்துக் கொள்வதற்கான முயற்சியில் இறங்கினர். ஆங்கிலேயர்கள் முஸ்லிம் மக்களை ஒரு தனித்துவமான இனக்குழுவாக ஏற்றுக்கொண்டனர். அதுமட்டுமல்ல ஆங்கிலேயர்கள், போர்த்துக்கேயர்கள் மற்றும் ஒல்லாந்தர்கள் முஸ்லிம்களின்மீது கொண்டுவந்த சிவில் பொருளாதாரக் கட்டுப்பாடுகளை அகற்றினர். இதனைத் தமக்குச் சாதகமானவகையில் பயன்படுத்திய முஸ்லிம் மக்கள் தங்களது பொருளாதார நடவடிக்கையினை நன்கு முன்னெடுத்தனர். தம்மை மீளவும் ஒரு வர்த்தக சமுதாயமாக மாற்றிக்கொண்டனர். இதனால் இவர்களது மத்தியில் பணக்கார வகுப்புபொன்று யாழ்ப்பாணத்தில் மட்டுமன்றி இலங்கை முழுவதிலுமே தோற்றம் பெற்றது. இதுவே பிற்காலத்தில் அரசியலில் முஸ்லிம் மக்களின் தலைமைத்துவத்தினையும் ஏற்றுக்கொண்டது.

### 3.4. சுதந்திரத்தின் பின்பாக

இலங்கையின் சுதந்திரத்தின் பின்பாகச் சகல துறைகளிலும் இஸ்லாமிய மக்கள் முன்னேறத் தொடங்கினர். அரசியலில் ஆட்சியாளர்களைத் தீர்மானிக்கின்ற பலம் பெற்றவர்களாக சில பகுதிகளில் காணப்பட்டனர். 1954இல் யாழ் மாநகரசபைக்குப் போட்டியின்றி எம்.எம்.சுல்தான் என்பவர் முதலாவது மேஜராகத் தெரிவானார். இருப்பினும் தென்னிலங்கை மற்றும் கிழக்குப் பகுதிகளில் உள்ள முஸ்லிம் மக்களைவிட இவர்கள் இவ்விடயமாகப் பின்தங்கிய நிலையிலேயே காணப்பட்டனர். பொருளாதாரத்துறையில் பிரகாசிக்கத் தொடங்கினர் கல்வித்துறையில் முன்னேற்றமிருந்தது.

## III. ஆய்வின் மையம்

### 3.1. போர்த்துக்கேயர்களது காலம் (கி.பி. 1505–1658)

இலங்கையில் போர்த்துக்கேயர்களது செல்வாக்கு ஏற்பட்ட காலந்தொடக்கம் முஸ்லிம் மக்களது வாழ்க்கையில் இருண்டகாலப்பகுதி ஆரம்பித்ததெனலாம். அதுவரை காலமும் அராபியர்களின் கைகளிலிருந்த வர்த்தகம் போர்த்துக்கேயர்களது கைகளுக்குச் சென்றது. இத்தகையதொரு பின்னணியில் போர்த்துக்கேயர்கள் நாட்டுக்குள் நுழைவதனை எதிர்த்த முதல் பிரிவினர்களாக இவர்களைக்கொள்ளலாம். தென்னிலங்கையில் மாயாதுன்னையும் அவனது மகனும் இதேகொள்கையினையே போர்த்துக்கேயர்களுக்கெதிராகப் பின்பற்றியதனால் முஸ்லிம் மக்களும் இவர்களுடன் இணைந்து அப்பகுதிகளில் போர்த்துக்கேயர்களுக்கெதிராகப் போராடினர் [13]. போர்த்துக்கேயர்களைப் பொறுத்தவரை யாழ்ப்பாணம் அவர்களது நேரடியான கட்டுப்பாட்டின்கீழ் ஏறத்தாள 39 வருடங்களே காணப்பட்டதனால் பிற பகுதிகளில் ஏற்பட்ட தொல்லைகள் போன்று இஸ்லாமியர்களுக்கு இப்பகுதிகளில் நீண்டகாலத்திற்கு அவர்களால் ஏற்படவில்லை. இருப்பினும் அவ்வப்போது போர்த்துக்கேயர்கள் யாழ்ப்பாணத்தின்மீது மேற்கொண்ட தாக்குதல்களின்போது தமிழர்களது சொத்துக்களுடன்கூடவே இஸ்லாமியர்களது சொத்துக்களும் அழிக்கப்பட்டன.

போர்த்துக்கேயர்களது மதமாற்ற நடவடிக்கையில் ஒரு முஸ்லிமாவது கத்தோலிக்க சமயத்துக்கு மாறியதாகத் தெரியவில்லை [5]. அதுமட்டுமன்றி அவர்கள் கத்தோலிக்க மதக்கல்வியினை ஏற்றுக் கொள்ளவுமில்லை. இதனால் கத்தோலிக்கப் பாதிரிமார்களது எண்ணத்தில் முஸ்லிம் மக்கள் மதவெறியர்களாக வர்ணிக்கப்பட்டனர். அந்தவகையில் போர்த்துக்கேய ஆட்சியாளர்கள் இஸ்லாமிய மக்களின்மீது அதிக காழ்ப்புணர்ச்சியினைக் காட்டுவதற்கு இவர்களும் ஒரு காரணமாக இருந்தனர் [1]. இதனால் அக்காலப்பகுதியில் முஸ்லிம் மக்களது இரண்டாவது பெரிய குடியிருப்பாகக் காணப்பட்ட தென்மிருசுவிலில் இருந்த முஸ்லிம் மக்களும் பூநகரி போன்ற இடங்களுக்கு இடம்பெயர்ந்தனர் [1]. இலங்கைக்கும் தென்னிந்தியாவுக்கும் இடையிலான வர்த்தகமானது போர்த்துக்கேயர்களின் வருகைக்கு முன்னதாக, ஏற்கனவே குறிப்பிட்டதுபோல் தென்னிந்தியாவுடன் தொடர்புடைய முஸ்லிம்களிடமே காணப்பட்டது. அவர்கள் பாக்கு, தும்பு, கயிறு, வாசனைப் பொருட்களை இலங்கையிலிருந்து கொண்டு சென்றதுடன் துணிவகைகள், அரிசி, கருவாடு என்பனவற்றினை இறக்குமதியும் செய்தனர் [10]. இவர்கள் இலங்கைப் பெண்களைத் திருமணம் செய்துகொண்டதுடன் பெருமளவு சொத்துக்களையும் யாழ்ப்பாணத்தில் வைத்திருந்தனர் [11]. போர்த்துக்கேயர்களது காலத்தில் நெசவுத்தொழில், முத்துக்குளித்தல், யானை பிடித்தல் மரவேலைத் தொழில்களை மேற்கொண்டவர்கள் பலரும் யாழ்ப்பாணத்து முஸ்லிம்களாகவே காணப்பட்டனர்.

### 3.2. ஒல்லாந்தர்களது காலம் (கி.பி. 1658–1796)

ஒல்லாந்தர்களது ஆட்சியில் இஸ்லாமியர்கள் தங்களது மார்க்கநெறிகளைச் சரிவரக் கடைப்பிடிக்க முடியவில்லை. தாடிவளர்த்தல் மற்றும் செருப்பு அணிவதற்கு இவர்கள் வரிகளைச் செலுத்த வேண்டியேற்பட்டது. ஆரம்பத்தில் யாழ்ப்பாணம், கொழும்பு, காலி, மாத்தறை போன்ற பிரதேசங்களில் இஸ்லாமியர்கள் வசிப்பதற்குத் தடைகள் போடப்பட்டன. இத்தகைய கட்டுப்பாடுகளின் மூலமாக முஸ்லிம் மக்களிடமிருந்த வியாபாரத்தினைக் கைப்பற்றிக்கொள்வதே ஒல்லாந்தர்களது நோக்கமாகக் காணப்பட்டது [7]. அக்காலப்பகுதியில் இஸ்லாமியர்களது குடியேற்றங்கள் உசன், சாவகச்சேரி, நல்லூர் போன்ற பகுதிகளில் அதிகளவில் காணப்பட்டன. மேலும் அக்காலப்பகுதியில் இவர்கள் தங்கள் பகுதிகளிலுள்ள சந்தைகளில் வியாபார நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுவந்தனர் [7].

இக்காலப்பகுதியில் சாதியமைப்பானது யாழ்ப்பாணத்தில் மிகவும் இறுக்கமான முறையில் கடைப்பிடிக்கப்பட்டு வந்தது [3]. சாதிக்கொரு வீதிகள் காணப்பட்டதனை அக்காலச் சான்றுகள் தெளிவாக உணர்த்தி நிற்கின்றன. அக்காலப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த இஸ்லாமிய மக்கள், தமிழர்கள் மத்தியில் தாழ்ந்த சாதியினராகக் கருதப்பட்டவர்கள் செய்த எந்தவொரு தொழிலையும் செய்தமைக்குச் சான்றுகள் கிடைக்கவில்லை. இது அவர்கள் அக்காலப்பகுதியில் மேலான இனத்தவர்களாகக் கருதப்பட்ட நிலையினை உணர்த்துகின்றது [6]. மேலும் இது இஸ்லாமியர்களின் மீதான தமிழ்ப் பண்பாட்டின் செல்வாக்கினையே காட்டுகின்றது.

யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த வைத்திலிங்கச்செட்டியாரும் முகமதுதம்பி மரைக்காயர் என்பவரும் சமகாலத்தில் நல்ல நண்பர்களாக விளங்கியிருந்தனர். இவர்கள் இருவரினதும் முயற்சியாலேயே யாழ்ப்பாணத்தில் ஒரு சிவன்கோவிலும் இரு பள்ளிவாசல்களும் அமைக்கப்பட்டன [10]. ஒல்லாந்தர்களின் காலத்தில் ஏராளமான இஸ்லாமியப் பிள்ளைகள் இந்துக்களால் அமைக்கப்பட்ட பாடசாலைகளில் கல்விபயின்று வந்தனர். இக்காலப்பகுதியில் ஒல்லாந்தர்களால் அமைக்கப்பட்ட பாடசாலைகளில் இவர்கள் தங்கள் குழந்தைகளைச் சேர்ப்பதற்கு முன்வரவில்லையென்பது குறிப்பிடத்தக்கது. அதேநேரத்தில் சமகாலத்தில் இந்துக்களில் பலர் புரட்டஸ்தாந்து மதம் மாறிக் கொண்டதுடன் அதன்மூலமாகச் சலுகைகளைப் பெற்று அவர்களது பாடசாலைகளில் தங்களது குழந்தைகளையும் சேர்த்துக் கொண்டமையும் இவ்விடத்தில் குறிப்பிடத்தக்கது [10].

அக்காலப்பகுதியில் வன்னிப் பகுதியூடாகவும் யாழ்ப்பாணத்தில் காணப்பட்ட துறைமுகங்களூடாகவும் கண்டி மற்றும் தென்னிந்தியப் பகுதிகளுடன் வர்த்தகம் மேற்கொள்வதில் இஸ்லாமியர்களது பங்கானது குறிப்பிடத்தக்கவகையில் அமைந்திருந்தது. யாழ்ப்பாணத்திலிருந்த முஸ்லிம் வியாபாரிகள் கண்டியுடன் வர்த்தகத்தில் பங்குகொண்டமைக்கான குறிப்புக்கள் காணப்படுகின்றன. யாழ்ப்பாணத்துக்குப் பொதிமாடுகளுடன் சென்று வியாபாரம் மேற்கொள்கின்ற முஸ்லிம் மக்களுக்கு வரிச்சலுகை வழங்கப்பட வேண்டுமெனக் கண்டிப் பிரதானியொருவன் கி.பி. 1699இல் யாழ்ப்பாணத்திலிருந்த கொமாண்டருக்கு மடலொன்றினையும் வரைந்திருந்தான். ஒல்லாந்தர்களது ஆவணங்களில் முஸ்லிம் மக்கள் கப்பல் சொந்தக்காரர்களாகக் காணப்பட்டமை தொடர்பான குறிப்புக்கள் சில காணப்படுவதாகப் பேராசிரியர் சி. பத்மநாதன் கூறுகின்றார் [4].

ஒல்லாந்தர்களின் காலத்தில் தையல்வேலைகளிலும் யாழ்ப்பாணத்தில் ஒருசில முஸ்லிம் மக்கள் ஈடுபட்டிருந்தனர். இங்கிருந்த முஸ்லிம் மக்கள் அதிகாரிவரி, தலைவரி போன்றவற்றினை அரசாங்கத்துக்குச் செலுத்தி வந்ததுடன் ஒல்லாந்தர்களுக்கு ஊழியமும் செய்ய வேண்டியிருந்தது. இவர்கள் விவசாயம் மற்றும் பல்வேறு தொழில் முயற்சிகளிலும் ஈடுபட்டு வந்தனர். சிலர் குத்தகைக்காரர்களாகவும் பணியாற்றியிருந்தனர். 1792இல் யாழ்ப்பாணத்தில் சாயவேர் தொடர்பான குத்தகை சேகுநயினாபிள்ளை என்பவரிடம் கொடுக்கப்பட்டிருந்தது. 1791இல் நெல்வரி தொடர்பான குத்தகை வண்ணார்பண்ணையைச் சேர்ந்த முஸ்லிம் ஒருவருக்கு வழங்கப்பட்டது. மன்னாரில் சுங்கவரியினைச் சேகரிக்கின்ற பொறுப்பு வண்ணார்பண்ணையைச் சேர்ந்த மன்னன்மாப்பிள்ளை மாலிநயினார் என்பவரது பொறுப்பில் விடப்பட்டது [9]. மேலும் இவர்களது காலத்தில் யாழ்ப்பாணத்திலிருந்த விவசாயிகள் மலையாளப்புகையிலை வியாபாரத்தின் மூலமாக அதிகளவான இலாபத்தினை உழைத்தனர். முஸ்லிம் வியாபாரிகள்தான் தமிழர்களிடமிருந்து இவற்றினை அதிகளவில் கொள்வனவுசெய்து தென்னிந்தியாவுக்குக் கொண்டு சென்று விற்பனை செய்து வந்தனரென்பது அவதானிக்கத்தக்கது [8].

### 3.3. ஆங்கிலேயர்களது காலம் (கி.பி. 1796–1948)

இக்காலப்பகுதியில் முஸ்லிம் மக்கள் அரசியலில் தங்களை இணைத்துக் கொள்வதற்கான முயற்சியில் இறங்கினர். ஆங்கிலேயர்கள் முஸ்லிம் மக்களை ஒரு தனித்துவமான இனக்குழுவாக ஏற்றுக்கொண்டனர். அதுமட்டுமல்ல ஆங்கிலேயர்கள், போர்த்துக்கேயர்கள் மற்றும் ஒல்லாந்தர்கள் முஸ்லிம்களின்மீது கொண்டுவந்த சிவில் பொருளாதாரக் கட்டுப்பாடுகளை அகற்றினர். இதனைத் தமக்குச் சாதகமானவகையில் பயன்படுத்திய முஸ்லிம் மக்கள் தங்களது பொருளாதார நடவடிக்கையினை நன்கு முன்னெடுத்தனர். தம்மை மீளவும் ஒரு வர்த்தக சமுதாயமாக மாற்றிக்கொண்டனர். இதனால் இவர்களது மத்தியில் பணக்கார வகுப்புபொன்று யாழ்ப்பாணத்தில் மட்டுமன்றி இலங்கை முழுவதிலுமே தோற்றம் பெற்றது. இதுவே பிற்காலத்தில் அரசியலில் முஸ்லிம் மக்களின் தலைமைத்துவத்தினையும் ஏற்றுக்கொண்டது.

### 3.4. சுதந்திரத்தின் பின்பாக

இலங்கையின் சுதந்திரத்தின் பின்பாகச் சகல துறைகளிலும் இஸ்லாமிய மக்கள் முன்னேறத் தொடங்கினர். அரசியலில் ஆட்சியாளர்களைத் தீர்மானிக்கின்ற பலம் பெற்றவர்களாக சில பகுதிகளில் காணப்பட்டனர். 1954இல் யாழ் மாநகரசபைக்குப் போட்டியின்றி எம்.எம்.சுல்தான் என்பவர் முதலாவது மேஜராகத் தெரிவானார். இருப்பினும் தென்னிலங்கை மற்றும் கிழக்குப் பகுதிகளில் உள்ள முஸ்லிம் மக்களைவிட இவர்கள் இவ்விடயமாகப் பின்தங்கிய நிலையிலேயே காணப்பட்டனர். பொருளாதாரத்துறையில் பிரகாசிக்கத் தொடங்கினர் கல்வித்துறையில் முன்னேற்றமிருந்தது.

இருப்பினும் எதிர்பார்த்த அளவுக்கு இவர்களால் மற்ற சமூகத்தவர்களுடன் ஒப்பிடக்கூடிய அளவுக்கு கல்வியில் முன்னேற முடியவில்லை. யாழ்ப்பாணத்துச் சமூகத்துடனான இஸ்லாமியர்களது உறவு சுதந்திரத்தின் பின்பாகவும் சுமூகமானமுறையிலேதான் அமைந்திருந்தது.

ஒன்றாகப் படித்தனர், ஒன்றாகப் பணியாற்றினர், தமிழ்மக்களில் பலர் பல கிலோமீற்றர்களுக்கு அப்பாலிருந்து அவர்களால் நடத்தப்படுகின்ற உணவகங்களை நாடிவந்தார்கள், ஆண்கள் பலர் ஆடைகளைத் தைப்பதற்கு எங்கிருந்தாலும் இவர்களது கடைகளையே தேடிச் சென்றார்கள். இருபகுதியினரும் மற்றவர்களது இன்பதுன்பங்கிலும் பங்கேற்றுக்கொண்டனர். திருமண உறவுகளையும் பேணிக்கொண்டனர். யாழ்ப்பாணத்தில் பாராளுமன்றத்துக்கான பிரதிநிதிகளைத் தெரிவுசெய்வதிலும் இவர்கள் தங்களது இனத்துவ, சமுதாய அடையாளங்களுக்கு அப்பால் நின்று தமிழ்ப் பிரதிநிதிகளைத் தெரிவுசெய்தனர். யாழ்ப்பாணத்தில் பெரும்பாலான இஸ்லாமியர்கள் வர்த்தகத்தினையும் மீனவத் தொழிலையும் மேற்கொண்டனர். சிலர் தையல்வேலை, இரும்பு விற்பனை, நடமாடிப் பாத்திரங்கள் விற்பனை செய்தல், புடவைகளது விற்பனை, சிறு வர்த்தக நிலையங்களை, உணவுச்சாலைகளை, இறைச்சிக்கடைகளை நடாத்துதல், சிப்பம் கட்டுதல், ஒட்டுவேலைகள் போன்றவற்றிலும் ஈடுபட்டனர். 1956இன் பின்பாகவே அரச உத்தியோகங்களை அதிகளவில் யாழ்ப்பாண இஸ்லாமியர்கள் நாடிச்சென்றனர். இஸ்லாமிய மக்கள் மரம் ஏறுவோர், சலவைத் தொழிலாளிகள், தச்சர், மேசன் போன்றவர்கள் செய்கின்ற தொழில்களை பெருமளவுக்கு யாழ்ப்பாணத்தில் செய்யவில்லையென்பது குறிப்பிடத்தக்கது.

நாட்டில் 1980களின் பின்பாக உள்நாட்டுப்போர் சூடுபிடித்த பின்னரும்கூட இலங்கையின் பிற பகுதிகளிலிருந்த இஸ்லாமியர்கள் தமிழ்மக்களுடன் கொண்ட உறவிலும் பார்க்க யாழ்ப்பாணத்தில் இவர்கள் கொண்டிருந்த உறவு வேறுபட்ட வகையில் அமைந்திருந்தது. இக்காலப் பகுதியில் நாட்டின் ஏனைய பகுதிகளில் இரு பிரிவினர்களுக்குமிடையிலே விரும்பத்தகாத சம்பவங்கள் ஏற்பட்ட சமயங்களில் யாழ்ப்பாணத்தில் இவர்கள் இருவருக்குமான உறவு மிகவும் நெருக்கமாகவே இருந்து வந்தது. ஆரம்பகாலங்களில் இஸ்லாமியர்கள் சிலர் தமிழர்களது போராட்ட இயக்கங்களிலும் தங்களது பங்களிப்பினையும் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. 1986இன் பின்பாக யாழ்ப்பாணக் கோட்டையிலிருந்து எறிகணைகள், விமானத் தாக்குதல்கள் அடிக்கடி தமிழ் தீவிரவாத இயக்கத்தினருக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட நேரத்தில், அவை மக்கள் வாழ்ந்த பகுதிகளில் வீழ்ந்த சமயங்களில், பல தமிழ்மக்கள் தங்களது குழந்தைகளுடன், முஸ்லிம்மக்கள் வாழ்ந்த பகுதிகளில் தஞ்சமடைந்திருந்தனர். 1987இன் பின்பாக இந்திய இராணுவத்தினர் யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்தபோது பல தமிழ் இளைஞர்கள் பயத்தினால் யாழ்ப்பாணம் சுற்றிவளைக்கப்படுகின்ற சந்தர்ப்பங்களிலெல்லாம் இவர்கள் வாழ்ந்த பகுதிகளுக்குச் சென்று ஒதுங்கிக்கொண்டனர். அவ்வாறே இலங்கையின் பிற பகுதிகளிலிருந்து கல்வி மற்றும் பிற தேவைகளின் நிமித்தம் யாழ்ப்பாணத்தில் தங்கிப்பிரச்சினை ஏற்பட்ட காலங்களில் சிக்கிக்கொண்ட பல முஸ்லிம் மக்களைத் தங்களது சொந்தக் குடும்ப உறவுகள் போன்று பாதுகாத்து அவர்களது சொந்த இடங்களுக்கு யாழ்ப்பாண மக்கள் அனுப்பியதனை இஸ்லாமியர்கள் இன்றும் மறக்கவில்லை. இது அக்கால யாழ்ப்பாணத் தமிழ்-முஸ்லிம் மக்களுக்கிடையிலான உறவின் நெருக்கத்தினைப் புலப்படுத்துவதாக உள்ளது. ஆனால் சமகாலத்தில் இலங்கையின் பிற பகுதிகளில் இந்த இரு பிரிவினர்களுக்கடையிலான உறவுநிலை இத்தகைய சிக்கலான காலங்களிலும் பேணப்பட்டதா என்பது தெரியவில்லை.

### 3.5. யாழ்ப்பாண முஸ்லிம் மக்களது இடப்பெயர்வு

1990 இன் இறுதியில் நாட்டில் ஏற்பட்ட நெருக்கடியான சூழ்நிலையில் அவர்கள் யாழ்ப்பாணத்தினைவிட்டு இடம்பெயர வேண்டிய நிலைக்குப் பலவந்தமாகத்தள்ளப்பட்டனர். பன்னெடுங்காலமாக இப்பிரதேசத்தில் வாழ்ந்த இம்மக்கள் ஐரோப்பியர்களின் ஆட்சியில்கூட இத்தகையதொரு நெருக்கடியினைச் சந்திக்கவில்லை. அசையும் அசையாச் சொத்துக்கள் எல்லாவற்றினையும் இழந்து பல துன்பங்களுடன் கூண்டோடு சென்றனர். கைகளில் 2000 ரூபா பணத்துடன் 24 மணிநேரத்திற்குள் மனோகரா தியேட்டரில் வைத்து அவர்கள் அப்புறப்படுத்தப்பட்டனர். வசதிபடைத்த இஸ்லாமியர்கள், பிறபகுதிகளில் உறவுகள் வைத்திருந்த சிலர் இத்தகையதொரு நிகழ்வு ஏற்படப்போவதனை அறிந்து ஏற்கனவே யாழ்ப்பாணத்தினைவிட்டு வெளியேறியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

3.6. யாழ்ப்பாண முஸ்லிம் மக்களது போருக்குப் பின்னரான மீள்வருகை

பிற்பட்ட காலங்களில் இலங்கையின் பிறபகுதிகளில் தங்களது சமூகத்துடன் சேர்ந்த இவர்கள் பல்வேறு தொழில்களைப்புரிந்து வாழ்க்கையினைச் செலுத்தியிருந்தாலும் தாம் வாழ்ந்த மண்ணினை அவர்களில் பலரால் மறக்கமுடியவில்லை. 2002 இல் ஏற்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் யாழ்ப்பாணத்தில் முஸ்லிம் மக்கள் குடியேறத் தொடங்கினர். இவர்களுக்கு அரச, அரசசார்பற்ற நிறுவனங்களது ஆதரவு போதியளவில் கிடைக்காதவிடத்தும் இவர்களது மீள்குடியேற்ற நடவடிக்கைகள் தொடர்ந்தன. ஆனால் வசதிபடைத்த செல்வந்த இஸ்லாமியர்கள் தங்கள் இருப்பிடங்களைப் பார்ப்பதற்கும் அவற்றினை விற்பனை செய்வதற்கும் வந்தனரே தவிர நிலையாகக் குடியேறும் எண்ணம் அவர்களுக்கு அத்தருணத்தில் இருக்கவில்லை. சாதாரண ஏழை நடுத்தர வர்க்கத்து இஸ்லாமியர்களே இதில் தீவிரமான ஆர்வத்தினைக் காட்டத்தொடங்கினர்.

இந்நிலையில் 2006 இல் திரும்பவும் ஏற்பட்ட போர்ச்சூழல் காரணமாக இஸ்லாமியர்களது மீளக்குடியேற்றம் தடைப்பட்டது. 2009 இல் போர் முடிவுக்கு வந்தமையின் காரணமாக மீளவும் இஸ்லாமியர்களது வருகை யாழ்ப்பாணத்தினை நோக்கி ஆரம்பித்தது. முன்னர் நடைபெற்ற மீள்குடியேற்ற நடவடிக்கைகளைவிட தற்போது பரவலாகவும் அதிகளவிலும் இது இடம்பெற்று வருகின்றது. யாழ்ப்பாண நகரினை மையமாக வைத்தே அதிகளவில் இவர்களது குடியேற்றம் இடம்பெற்று வருவதனைப் புள்ளிவிபரங்கள் காட்டுகின்றன. அதேநேரத்தில் பிற பகுதிகளிலும் பள்ளிவாசல்களை அண்டிய பிரதேசங்களில் அவர்கள் குடியேறி வருகின்றனர்.

3.7. இன்றைய யாழ்ப்பாண இஸ்லாமிய மக்களது பொருளாதார நடவடிக்கைகள்

யாழ்ப்பாணத்தில் வாழ்கின்ற முஸ்லிம் மக்களில் பெரும்பான்மையினர் நகரப்புறங்களைச் சார்ந்து குடியேறிக்கொள்வதனால் இவர்கள் நகரம் சார்ந்த தொழில்களையே பெருமளவுக்குச் செய்து வருகின்றனர். குறிப்பாக வியாபாரம், தச்சுத்தொழில், தையல், உணவுக்கடை நடாத்துதல் இரும்பு, நகைவியாபாரம், இறைச்சிக்கடை நடாத்துதல், பள்ளிவாசல் பராமரிப்பு போன்றவற்றில் அதிகளவில் இவர்கள் ஈடுபட்டு வருகின்றனர். பல இஸ்லாமியர்கள் தங்கள் தொழில் நிமித்தமாகவே யாழ்ப்பாணத்தில் தற்காலிகமாகத் தங்கியுள்ளனர். இஸ்லாமியர்கள் ஐரோப்பியர் காலத்திலும் அதற்கு முன்பாகவும் சிறப்புடன் செய்துவந்த துணி, புடவை வியாபாரத்தினை தற்காலத்தில் யாழ்ப்பாணத்தில் செய்கின்றனர். அவர்கள் விசுவமடு, கிளிநொச்சி, முல்லைத்தீவு, தண்ணீரூற்று, தீவுப்பகுதிகள் மற்றும் யாழ்ப்பாணத்தின் பிற பகுதிகளுக்கு வாகனங்களிலும் நடையாகவும் சென்று வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். மேலும் இவர்கள் பழைய பாத்திரங்கள், புடவைகளைப் பெற்றுக்கொண்டு அலுமெனியப் பாத்திரங்கள் வழங்குதல், நடைபாதை வியாபாரம், தோல்வேலைகள், குடைகள் திருத்துதல், திறப்பு வெட்டுதல் போன்ற தொழில்களை செய்து வருகின்றனர். ஏறத்தாள 400க்கும் மேற்பட்ட முஸ்லிம் தையல் தொழிலாளர்கள் யாழ்ப்பாணப்பாண மாவட்டத்தில் காணப்படுகின்றனர். இன்று தையல் தொழிலில் யாழ்ப்பாணத்தில் முஸ்லிம் பெண்களும் பிள்ளைகளும்கூடப் பங்குகொள்கின்றமை முக்கியமானதொரு அம்சமாகும். இடப்பெயர்வுக்கு முன்பாக இத்தகையதொருநிலை அவர்களிடம் காணப்படவிலலை. தையல் தொழிலில் அன்றும்சரி இன்றும்சரி இவர்கள் சிறப்புத் தேர்ச்சி பெற்றவர்களே. மேலும் 15க்கும் மேற்பட்ட மெத்தைசார் நிலையங்கள் காணப்படுகின்றன. இவையாவும் முஸ்லிம் மக்களால் நடாத்தப்படுவதுடன் இங்கு வேலை செய்பவர்களில் எல்லோருமே முஸ்லிம் மக்களாகக் காணப்படுகின்றனர்.

பெரும்பாலானவர்கள் தாங்கள் இடம்பெயர்ந்தமையின் காரணமாக பல தொழில்களை யாழ்ப்பாணத்தில் இழந்துவிட்டதாகவும் மறுபடியும் வேலைதேடி வருவதாகவும் கூறுகின்றனர். குறிப்பாக இவர்கள் இழந்த தொழில்களில் தையல் தொழில் முக்கியமானதாகும். அவ்விடத்தினை இன்று யாழ்ப்பாணத்திலிருந்த தமிழ் இளைஞர்கள் நிரப்பிவிட்டனர். இருப்பினும் இன்றுவரை அவர்களது தையலுக்கு யாழ்ப்பாணத்தில் நல்ல மதிப்புள்ளதென்பதனை எவரும் மறுக்க முடியாது. இடம்பெயர்வதற்கு முன்னதாக யாழ்ப்பாணம் நவீனசந்தைப் பகுதியில் 11 தொழிலாளர்களுடன் தையல்கடை வைத்திருந்த ஒருவர் மீளக்குடியேறிய நேரத்தில் இன்று தொழில் தொடர முடியாத சூழ்நிலையில் அவர் பிறதொழிலைச் செய்வதற்கும் இன்று இயலாத நிலையில் காணப்படுகின்றார். அதேநேரத்தில் முன்னர் யாழ்ப்பாணத்தில் தையல் தொழிலினை நடாத்திவந்த பலரும் அதேநிலையில் மீண்டும் வந்து தமது தொழிலைச் சிறப்புடன் செய்தும் வருகின்றனர்.

இடம்பெயர்ந்து சென்றதனால் தாங்கள் புதியதொழில் முயற்சிகளையும் புதிய தொழில்களைக் கற்றுக்கொள்கின்ற வாய்ப்பினையும் பெற்றதாகச் சிலர் கூறுகின்றனர். குறிப்பாக மேசன் தொழிலினைப் பலரும் விவசாயத்தினைச் சிலரும் பழகிக்கொண்டதாகவும் மேலும் அவர்கள் கூறுகின்றனர். யாழ்ப்பாணத்திலிருந்த காலப்பகுதியில் தாங்கள் மேசன் தொழிலில் தேர்ச்சி பெறவில்லையெனவும் தெரிவித்தனர். மீளக்குடியமர்ந்த இஸ்லாமியர்கள் பற்றி ஒருவர் கூறும்போது, யாழ்ப்பாண முஸ்லிம் மக்கள் தெருவும் தொழிலுமாக இருந்தவர்கள். இன்று அவர்கள் பல்வேறு நெருக்கடிகளுடன் தொடர்பான தொழில்களைப் பழகியதுடன் தமது கௌரவமான வாழ்க்கையினைத் தொலைத்தவர்களாக உள்ளனர். தமக்கெனத் தனித்துவமான வர்த்தகமுறையினைக் கொண்டிருந்த இவர்கள் இன்று நிரந்தரமான தொழிலைப்பெற முடியாது கிடைத்த தொழில்களையெல்லாம் செய்து வருகின்றனர். ஏறத்தாள 30 வீதமானவர்கள் இரும்பினையும் 15 வீதமானவர்கள் இறைச்சித் தொழிலையும், தையலையும் 10 வீதமானவர்கள் அரசதொழிலையும் பிறர் ஏனைய தொழில்களையும் யாழ்ப்பாணத்தில் செய்து வருகின்றனர். இருப்பினும் மீளக்குடியேற்ற நடவடிக்கைகள் அதிகரித்து வருவதனால் இவற்றில் மாற்றங்கள் காலப்போக்கில் ஏற்படலாம். 15 இற்கும் மேற்பட்ட இரும்புக்கடைகளை 200 வரையான வியாபாரிகள் யாழ்ப்பாணத்தில் நடாத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இடப்பெயர்வுக்கு முன்னரான காலப்பகுதியில் யாழ்ப்பாணத்து இஸ்லாமியர்கள் இரும்பு வியாபாரத்திலீடுபட்டிருந்தாலும் மீளக்குடியமர்வின் பின்பாகவே இவ்வியாபாரம் யாழ்ப்பாணத்தில் சூடுபிடித்துள்ளது. ஊர்கள் தோறும் சென்று சேகரிக்கப்படுகின்ற இரும்புப் பொருட்கள் இவர்களால் வாகனங்களில் தென்பகுதிகளுக்கு அனுப்பப்படுகின்றன.

குடும்பப்பொருளாதார நிலையினைச் சரிகட்டும் நோக்குடன் காலை மற்றும் மதிய உணவு தேவைப்படுபவர்களுக்கு அவற்றினைச் செய்து கொடுப்பதிலும் சில இஸ்லாமியக் குடும்பப்பெண்கள் இன்று யாழ்ப்பாணத்தில் ஈடுபட்டு வருகின்றனர். கூடுதலான வெளிவேலைகளை அவர்களே செய்கின்ற நிலை காணப்படுகின்றது. வெளியே தலைகாட்டாமல் இருந்த பெண்கள் இன்று வறுமையின் காரணமாக தங்களது கணவனுக்கோ அல்லது பெற்றோர்களுக்கோ சகோதரங்களுக்கோ உதவியாகச் செருப்புத் தைக்கின்ற தொழிலையும் செய்து வருகின்றனர். இவர்கள் இடம்பெயர்வதற்கு முன்னதாகச் சகல வசதிகளுடனும் கூடிய வாழ்க்கையினை மேற்கொண்டிருந்தனர். முஸ்லிம் தெருக்களில் அன்றிருந்த சந்தோசம் இன்று இல்லை. உறவினர்கள் இல்லை. சிறுவர்கள் பொருளாதார நிலை மோசமாகக் காணப்படுவதனால் கல்வியினைத் தொடரமுடியாத நிலையில் பெற்றோர்களால் பிற தொழில்களுக்கு அனுப்பப்படுகின்றனர். முன்பு நாவாந்துறையினை அண்டிய பிரதேசத்தில் கடற்றொழிலில் ஈடுபட்டவர்கள் பலர் அத்தொழிலைச் செய்வதற்குப் போதிய உபகரணங்கள் இன்மையினால் சிரமப்படுகின்றனர். மீன்பிடிப்பதற்கான கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்ட இந்த நிலையிலும் அவர்களால் மீன் வியாபாரம் மட்டுமே செய்ய முடிகின்றது. அரச உதவிகள், வீட்டுத்திட்டங்கள் நிவாரணத்தினை எதிர்பார்த்தே இன்று அதிகமான இஸ்லாமியக் குடும்பங்கள் யாழ்ப்பாணத்தில் உள்ளன.

யாழ்ப்பாணத்தின் ஐந்துசந்திப் பகுதியில் மீளக்குடியமர்ந்த சிலருடன் உரையாடியபோது அவர்களிடமிருந்து பெறப்பட்ட தகவல்கள் சில வருமாறு:

“மீளக்குடியேற்றத்தைத் தொடர்ந்து எமது சொந்த இடத்தில் எந்தத்தொழிலையாவது செய்து பிழைக்க வேண்டுமென்று எண்ணுகின்றோம். தற்போதுள்ளவர்கள் இரும்பு சேகரித்து விற்றல், இறைச்சிக்கடை, தையல்கடை, செருப்பு ஒட்டுதல், முச்சக்கரவண்டி ஓட்டுதல், தேநீர்கடை வைத்திருத்தல், நகரச் சுத்தீகரிப்புத் தொழில், மீன்வியாபாரம் போன்ற பல சேவைகளைச் செய்கின்றார்கள். ஆயினும் எங்கள் தொழிலை நிரந்தரமாகத் தொடர்வதற்கு எந்தவிதமான உத்தரவாதமும் கிடையாது. அக்காலத்தில் சகல வசதிகளுடனும் அமைக்கப்பட்டிருந்த எங்கள் வீடுகளில், இஸ்லாமியப் பெண்களுக்கான வாழ்க்கை முறைக்கேற்ப எல்லா வசதியும் உள்ளேயே அமைக்கப்பட்டிருக்கும். தற்போது எங்கள் வீடுகள் தரைமட்டமாக்கப்பட்டுக் காணப்படுவதனால் நீண்டதூரம் சென்று அவர்கள் குளிக்க வேண்டியிருக்கின்றது. இதனால் எங்கள் பெண்களை இங்கு அழைத்துவர முடியாத நிலையில் உள்ளோம். மேலும் வீட்டின் அருகேயுள்ள பனை மரங்களில் கள்ளு இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டிருப்பதனால் ஒரு பனை மரத்திலிருந்து 40 வீடுகளைப் பார்க்க முடியும். இவை எமது பெண்களின் வாழ்க்கைமுறைக்கு இடையூறாகக் காணப்படுகின்றது. முன்பு உறவுகள் பல அதிகமாக இருந்தமையால் எங்கும் எந்த நேரத்திலும் போய் வர முடியும்.”

அதேநேரத்தில் போர்ச்சூழ்நிலையின் காரணமாக இடம்பெயர்ந்த முஸ்லிம் மக்களில் பலர் இடம்பெயர்ந்து சென்ற இடங்களில் ஆரம்பத்தில் கஷ்ரப்பட்டாலும் புத்தளம் போன்ற பகுதிகளில் தற்காலத்தில் அவர்கள் பொருளாதாரத்தில் நல்ல நிலையில் காணப்படுகின்றனரென்பதனையும் மறுக்கமுடியாது. புத்தளம் பகுதியில் இவர்களது வருகையின் பின்னர்தான் இரும்பு வியாபாரம் களைகட்டத்தொடங்கியதென்பது சிலரது கருத்து. கல்விநிலையில்கூட மேம்பட்ட நிலையில் இன்று இடம்பெயர்ந்த முஸ்லிம் மக்கள் தென்பகுதிகளில் காணப்படுகின்றனர். தங்களது சொந்தச் செலவில் அவர்கள் அன்று குறைந்த விலைக்குப் (2000 ரூபா) புத்தளம் பகுதிகளில் கொள்வனவு செய்த நிலங்கள் இன்று பல இலட்சம் பெறுமதி வாய்ந்தவையாக மாறியுள்ளன.

பொதுப்பட யாழ்ப்பாணத்தில் தற்போது வாழ்கின்ற இஸ்லாமியர்களது பொருளாதாரநிலை மிகவும் மோசமாகவே உள்ளது. வியாபார நோக்கங்கள் கருதி தென்னிலங்கையிலிருந்து இங்கு வந்து தற்காலிகமாகத் தங்கிவிட்டுச் செல்பவர்கள் யாழ்ப்பாணத்தில் நிரந்தரமான தொழிலை நாடமாட்டார்கள். அதேநேரத்தில் பிறரது உதவிகளை நம்பி இங்கு வந்து குடியேறியவர்களது நிலை கவலைக்கிடமாகவே உள்ளது. நிவாரணம் தவிர்ந்த பிற உதவிகள் தங்களுக்குக் கிடைக்கவில்லையெனவும் வீட்டுத்திட்டங்கள் குறிக்கப்பட்ட அளவிலேயே செயற்படுவதாகவும் தங்களது சொந்தச் செலவிலேதான் தமது வீடுகளைப் புனரமைப்புச் செய்வதாகவும் பலர் கூறுகின்றனர். யாழ்ப்பாண நகரினை அண்டிய பகுதிகளில் சுமார் 1200 குடும்பங்கள் பதிவினை மேற்கொண்டபோதும் 450 குடும்பங்களே அப்பகுதிகளில் வாழ்கின்றனர். காரணம் அவர்களில் பலர் போதிய வசதிகள் கிடைக்காமையினால் மீளவும் திரும்பிச் சென்று விட்டனரெனலாம். *(பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்).*

3.8. இன்றைய யாழ்ப்பாண இஸ்லாமிய மக்களது சமூகநிலை

தற்போது யாழ்ப்பாணத்தில் நெடுங்குளம், பாசையூர் மேற்கு, றிக்லமென்மேற்கு, குருநகர் கிழக்கு, பெரியகடை, கோட்டை, வண்ணார்பண்ணை, கொட்டடி, நாவாந்துறை வடக்கு, நவாந்துறை தெற்கு, மூர்வீதி வடக்கு, மூர்வீதி தெற்கு, புதிய மூர்வீதி போன்ற இடங்களில் முஸ்லிம் மக்கள் குடியேற்றங்கள் இடம்பெற்று வருகின்றன. மேலும் இதனைவிட தீவுப்பகுதிகளான மண்கும்பான், நயினாதீவு போன்ற இடங்களிலும் தென்மராட்சிப் பகுதிகளான கொடிகாமம், சாவகச்சேரி, வடமராட்சியில் பருத்தித்துறையிலும் இவர்கள் இன்று குடியேறி வருகின்றனர். வேலணையில் கிட்டத்தட்ட 38 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றனர். *(வேலணை பிரதேச செயலகம்)* தென்மராட்சிப் பகுதியான கொடிகாமத்தில் பள்ளிவாசலின் பராமரிப்புக்காகவும், வர்த்தக நோக்கத்திற்காகவும் பள்ளிவாசலில் ஒரு சிலரே வாழ்ந்த வருகின்றனர். சாவகச்சேரியில் 6 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றனர் *(தென்மராட்சிப் பிரதேசசெயலகம்)* மற்றும் வடமராட்சிப் பகுதியான பருத்தித்துறை பகுதியில் கிட்டத்தட்ட ஐந்து குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. *(வடமாராட்சி வடக்குப் பிரதேச செயலகம்).*

பெரும்பாலான இஸ்லாமியக் குடும்பங்களில் குடும்பத்தலைவர்களே இங்கே தற்சமயம் தங்கியிருந்து தங்களது வீடுகளைத் திருத்திவருகின்ற அதேநேரத்தில் அவர்களது குடும்ப உறுப்பினர்கள் இலங்கையின் பிற பகுதிகளிலேதான் இருக்கின்றனர். தான் மீளவும் யாழ்ப்பாணம் வருவதற்கு தமது உறவினர்கள் விடவில்லையெனவும் அவர்களுக்குச் சொல்லாமல் சொந்த மண்ணில் வாழ்வதற்கு வந்துள்ளதாகவும் நேர்காணலின்போது 56 வயது நிரம்பிய 7 பிள்ளைகளின் தாய் குறிப்பிட்டுள்ளார். மேலும் அவர் சொல்லும்போது இடப்பெயர்வுக்கு முன்னதாகத் தான் பெற்றோர்களுடன் சந்தோசமாக வாழ்ந்ததாகவும் பின்னர் முகாம்களில் சிரமப்பட்டதாகவும் குறிப்பிட்டார். முன்னர் ஐந்து முஸ்லிம் பாடசாலைகள் இயங்கிய யாழ்ப்பாணத்தில் தற்சமயம் ஒரு இஸ்லாமியப் பாடசாலையே இயங்குகின்றது. அதில் சுமார் 450 வரையான மாணவர்கள் கல்விகற்றுக்கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது. சாதாரண வகுப்புரையே இன்று இப்பாடசாலையில் வகுப்புக்கள் நடைபெறுகின்றது. யாழ்ப்பாணத்தினைத் தமது பிறப்பிடமாகக்கொண்ட முஸ்லிம் பெற்றோர்களின் பிள்ளைகள் பலர் இன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், தேசிய கல்வியியல் கல்லூரி, ஆசிரிய கலாசாலை என்பனவற்றில் கல்வி பயின்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. நான் சந்தித்த இஸ்லாமியக் குடும்பங்களில் பல தாய்மார்கள் தங்களது பெண்பிள்ளைகள் அளவுடன் கற்றால் போதுமானதென்ற நிலைப்பாட்டினையே கொண்டுள்ளனர். அவர்களில் பலர் 10ஆம் வகுப்புரை படிக்கவில்லை. அத்துடன் தங்கள் பெண்பிள்ளைகளையும் அதிகம் படிப்பிப்பதற்கு விரும்பவில்லை. நாட்டுச்சூழலின் காரணமாக ஒழுக்கநெறிகளிலிருந்து அவர்கள் தவறிவிடுவதற்கான சந்தர்ப்பங்கள் ஏற்படுமென அவர்கள் கூறுகின்றனர். எனவே பெண்கல்வியென்பது யாழ்ப்பாணத்தினைப் பொறுத்தவரை சாதாரண இஸ்லாமிய மக்களிடையிலே இன்னமும் கேள்விக்குறியாகவே காணப்படுகின்றது. பாடசாலை

முடிந்தவுடன் தொலைக்காட்சியுடனேயே பெரும்பாலன இஸ்லாமியப் பெண்பிள்ளைகளின் வாழ்க்கை யாழ்ப்பாணத்தில் செல்கின்றது. ஒரு சிலரே தனியார் வகுப்புக்களுக்குச் செல்வதனை அவதானிக்க முடிகின்றது. ஆண்பிள்ளைகளில் அதிகமானவர்கள் குறிக்கப்பட்ட வயதினை அடைந்தவுடன் தொழில் முயற்சிகளிலேயே இறங்குவதனை தற்காலத்தில் யாழ்ப்பாணத்தில் அவதானிக்க முடிகின்றது. இன்றும் எழுத வாசிக்கத் தெரியாதவர்கள் இவர்களிடையிலே காணப்படுவதும் குறிப்பிடத்ததொரு அம்சமாகும்.

யாழ்ப்பாணத்தில் பிறக்காத எத்தனையோ இஸ்லாமியக் குழந்தைகள் யாழ்ப்பாணத்தில் பாடசாலைக் கல்வியினை இன்று தொடர்ந்துள்ளனர். அவர்களில் சில பெண்பிள்ளைகள் தாங்கள் புத்தளத்தின் பண்பாட்டுக்குள் ஊறியுள்ளதாகவும் அவற்றிலிருந்து தங்களை இன்னமும் விடுவித்துக்கொள்வதென்பது கடினமாக இருப்பதாகவும் உயர்தரக் கல்வியினை வைத்தீஸ்வரா வித்தியாலயத்தில் தொடருகின்ற இஸ்லாமிய மாணவியொருவர் தெரிவிக்கின்றார். மேலும் அவர் கூறும்போது தான் புத்தளத்திலிருக்கும்போது துவிச்சக்கரவண்டி ஓடுவதில்லையெனவும் மேலதிக வகுப்புக்களுக்குச் செல்வதில்லையெனவும் கூறிய அவர் தான் படித்து ஏராளமாகச் சாதிக்க வேண்டுமெனவும் விருப்பப்படுகின்றார். இருப்பினும் மீளக்குடியமர்ந்தமையின் பின்பாக கல்வியில் குறிப்பிடத்தக்கதொரு அதிகரிப்புக் காணப்பட்டாலும் ஒஸ்மானியாக் கல்லூரி அதிபர் குறிப்பிடுவது போன்று முஸ்லிம் மக்களது சனத்தொகைப் பெருக்கத்திற்கேற்ப கல்வியில் அதிகரிப்பு ஏற்படவில்லை. அதுவும் நகரப்பகுதிகளில் வாழ்கின்ற பிள்ளைகள் கல்வி கற்பதில் அக்கறை காட்டுபவர்களாகவும் கிராமப்புறங்களிலுள்ளவர்கள் கல்வி விடயமாச் சற்று ஒதுங்கியே வாழ்வதனையும் அவதானிக்க முடிகின்றது.

யாழ்ப்பாணத்தில் சேலை அணிகின்ற பெண்கள் குறைவாகவே உள்ளனர். வழக்கமாக அணிகின்ற பர்தாக்களை அவர்கள் தொடர்ச்சியாக அணிந்து வருகின்றனர். பெரும்பாலான முஸ்லிம் மக்களுக்கு இடம்பெயர்ந்து சென்ற பகுதிகளில் உறவுகள் இருக்கவில்லை. அவர்கள் காலப்போக்கில் திருமண உறவுகளை அங்கே செய்துகொண்டதன் மூலமாகப் புதிய உறவுகளையும் ஏற்படுத்திக்கொண்டனர். சிங்கள மக்களுடன்கூடத் திருமண உறவுகளை இவர்கள் செய்துகொண்டதுடன் இரு பகுதிகளுக்கும் இவர்கள் பாலத்தினை இதனூடாக ஏற்படுத்திக்கொண்டனர். இடம்பெயர்வதற்கு முன்பாக சீதனம் கொடுத்து ஆண்கள் திருமணம் செய்து கொள்கின்றமுறை முஸ்லிம் சமூகத்தில் காணப்பட்டது. தற்போது யாழ்ப்பாணத்தில் பெண்களிடம் சீதனம் வாங்கித் திருமணம் செய்கின்ற பழக்கம் ஏற்பட்டு விட்டது. புத்தளத்தில் பெண்களிடம் சீதனம் வாங்குகின்ற பழக்கம் இல்லை. ஆனால் தற்போது அவர்களும் மாறிவருகின்றனர்.

யாழ்ப்பாண முஸ்லிம் மக்கள் திருமண நாட்கள் போன்ற விசேட நாட்களில் புரியாணி தயாரிப்பார்கள். பெண்பிள்ளைகளின் வீட்டிலிருந்து மாப்பிள்ளை வீட்டுக்கு முட்டை, பழங்கள் என்பனவற்றினைக் கொண்டு செல்வார்கள். அங்கு இதனைக்கொண்டு வட்டிலப்பம் தயாரித்து உறவினர்களுக்கு வழங்குவர். இதனுடன் பீர்ணி என்ற ஒருவகையான இனிப்புப்பலகாரமும் அவர்களால் தயாரிக்கப்படும். ஆனால் இன்று இவையெல்லாம் அருகி வந்துள்ளது. இடப்பெயர்வு காரணமாக நண்டு, திருக்கை போன்றவற்றினையும் அவர்கள் உணவாக உண்ண ஆரம்பித்துள்ளனர்.

3.9. யாழ்ப்பாணத் தமிழ்மக்களுடனான தற்போதைய உறநிலை

மீள்குடியேற்றத்தின் பின்னராக இருபகுதியினருக்குமடையிலான உறவில் எத்தகைய மாற்றங்களும் ஏற்படவில்லை. மாறாக உறவுப்பாலம் தற்காலத்தில் நெருக்கமடைந்துள்ளதென்றே கூறவேண்டும். அத்துடன் தமிழர்களது பண்பாட்டுச் செல்வாக்கு இவர்களது பண்பாட்டில் ஊடுருவியுள்ளதனையும் அவதானிக்கலாம்.

இஸ்லாமிய முறையின் பிரகாரம் பெண்பிள்ளைகள் பூப்படைந்தால் வீட்டிலுள்ள தந்தைக்குக்கூடத் தெரியாததொருநிலை அன்று காணப்பட்டது. ஆனால் தமிழர்கள் பின்பற்றுகின்ற சடங்கு முறையினையொத்த முறைகள் இன்று அவர்கள் மத்தியில் கடைப்பிடிக்கப்படுவதுடன் அதனை நெருக்கமான உறவினர்களுக்குத் தெரியப்படுத்தி கிறிஸ்தவ மணப்பெண்போன்று வெள்ளை உடையில் பெண்பிள்ளைகள் அலங்கரிக்கப்பட்டு வீட்டினுள்ளே சடங்கு முறைகளும் விருந்துபசாரங்களும் நடைபெறுகின்றன. இது தமிழ்ப்பண்பாட்டின் செல்வாக்கினை எடுத்துக்காட்டுகின்ற வகையில் உள்ளது. இஸ்லாமியர்கள் இறந்த உடல்களை பாய்களில் சுற்றி அடக்கம் செய்வார்கள். இறந்தவர் வெள்ளை உடையில் அலங்கரிக்கப்படுவர். அடக்கம் செய்த சில நாட்களில் யாழ்ப்பாணத்தில் உள்ள முஸ்லிம் மக்கள் மத்தியில் தமிழர்களின் முறைபோன்று

விருப்பமான உணவுகள் சமைத்து முஸ்லிம் ஆண்கள் வரவழைக்கப்பட்டு உணவு பரிமாற்ற நிகழ்வு இடம்பெறும் ஆனால் படைக்கப்படுவதில்லை. மேலும் பாய்களில் அடக்கம் செய்யப்பட்டாலும் வீடுகளில் இறந்த உடலைப் பிரேதப்பெட்டியில் வைக்கின்ற பழக்கம் யாழ்ப்பாணத்தில் நிலவி வருகின்றது.

இடப்பெயர்வுக்கு முன்னதாக முஸ்லிம் மக்களது குடியிருப்புப் பகுதிகளுக்குள் தமிழருக்குச் சொந்தமான வீடுகள் காணப்படுவதில்லை. தமிழர்களது இறந்த உடல்கள்கூட அவர்களது குடியிருப்புக்களினூடாகச் செல்லவும்மாட்டாது. இன்று அத்தகையநிலை இல்லை. நோன்புக் காலங்களில் தமிழர்கள் பலர் அவர்களுக்கு உணவு சமைத்துக்கொடுத்திருந்தனர். அதேபோல் அவர்கள் வீடுகளில் மரணச்சடங்கு யாதேனும் நடந்தாலும் முஸ்லிம் மக்களும் பங்குகொண்டனர். ஆனால் முன்பிருந்த நண்பர்கள் இப்போது அவர்களுக்கு இல்லை. இருப்பினும் அவர்கள் இன்று நல்ல நண்பர்களைத் தேடிவருகின்றனர்.

யாழ்ப்பாண இஸ்லாமியர்களது வீடுகள் அமைப்பில் தமிழ்மக்களது வீடுகளிலிருந்து வேறுபட்டிருந்தாலும் நாட்டின் பிறபகுதிகளில் வாழ்கின்ற இவர்களது வீடுகளிலிருந்தும் வேறுபட்ட வகையில் பல வீடுகள் காணப்படுகின்றன. மீளக்குடியமர்ந்து வரும் அவர்கள் தங்களது வீடுகளின் முறையினை மாற்றவில்லை. அப்படியே அதனைப் புனருத்தாரணம் செய்து வருகின்றனர். இவை குறுகிய நிலப்பரப்பில் அமைந்திருந்தாலும் அவற்றில் போதிய வசதிகள் காணப்படுகின்றன. கூடுதலான வீடுகள் 4, 5, 6 அறைகளைக் கொண்டவைகளாகவே அமைக்கப்பட்டு வருகின்றன. இவர்களது வீடுதிருத்தும் பணிகள், பள்ளிவாசல்களை திருத்தும் பணிகள் போன்றவற்றுக்கு யாழ்ப்பாணத் தமிழ் மக்களின் பங்களிப்பு இன்றியமையாத வகையில் அமைந்துள்ளது. குறிப்பாக மேசன்கள், தச்சுத்தொழிலாளர்கள், அவர்களுக்குத் தேவையான மளிகைப்பொருட்களை விற்பனை செய்பவர்கள் போன்ற வடிவங்களில் சேவைகள் புரிகின்றனர். 1990களுக்கு முன்னதாக முஸ்லிம் மக்களே தங்களது அயலில் இத்தகைய சேவைகளை வழங்குபவர்களாகக் காணப்பட்டனர். யாழ்ப்பாண மாவட்டத்தில் காணப்பட்ட பள்ளிவாசல்களைத் திருத்துகின்ற முயற்சிகளில் ஈடுபட்டு சிலவற்றினைத் திருத்தியும் அவற்றில் மதவழிபாடுகளை மேற்கொண்டும் வருகின்றனர். இவர்கள் புதிதாக பள்ளிவாசல்கள் எவற்றையும் அமைக்கின்ற பணிகளில் ஈடுபடவில்லையென்பது குறிப்பிடத்தக்கது.

இந்த குறிக்கப்பட்ட இரண்டு வருடங்களில் தமிழ்மக்களுடன் யாழ்ப்பாணத்தில் கலப்புத் திருமணத்திலும் சில இஸ்லாமியக் குடும்பங்கள் முழுமனத்துடன் ஈடுபட்டுள்ளன. இவ்வாறு கலப்புத்திருமணங்கள் செய்துகொண்டவர்களை நல்லமுறையில் அவர்களது குடும்பம் கவனித்து வருவதாக முஸ்லிம் மக்கள் கூறுகின்றனர். இருப்பினும் ஏற்கனவே குறிப்பிட்டபடி இவ்விடயத்தில் தங்களது கலாசாரத்தின் அடையாளங்களை அவர்கள் விட்டுக்கொடுக்கவில்லை.

## IV. முடிவுரை

கி.பி. 8ஆம் நூற்றாண்டளவில் இலங்கையுடன் தொடர்புகளை ஏற்படுத்திக்கொண்ட அராபியர்கள் யாழ்ப்பாணத்தின் நிலையாகக் குடியிருப்புக்களை அமைத்து யாழ்ப்பாண மக்களுடன் வாழத்தொடங்கியமைக்கான உறுதியான ஆதாரங்கள் கி.பி. 13ஆம் நூற்றாண்டிலிருந்தே கிடைக்கின்றன. அக்காலந்தொடக்கம் யாழ்ப்பாணத்தின் சமூகக்கட்டமைப்பில் இவர்கள் காத்திரமானதொரு பங்கினை வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. அந்தவகையில் தற்போது யாழ்ப்பாணத்திலுள்ள தமிழ் இளைய தலைமுறையினருக்கு அவர்களுக்கும் தமிழ்ச் சமூகத்திற்கும் இடையிலே காணப்பட்ட உறவைப்பற்றி அதிகம் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. யாழ்ப்பாணத்தவர்களும் அவர்களுடன் இணைந்த வகையில் வர்த்தக நடவடிக்கைகளைப் பகிர்ந்துகொள்வதன் மூலமாக யாழ்ப்பாணத்தின் பொருளாதாரத்தினை உயர்த்திக்கொள்வதற்கான வாய்ப்புக்கள் அதிகரிக்கும். தற்காலிக வியாபார நோக்கத்திற்காகவும் வீட்டுக்குடியிருப்புத் திட்டங்களுக்காகவும் அவர்கள் யாழ்ப்பாணத்தில் தங்குவதனைத் தவிர்த்து நிரந்தரமாக யாழ்ப்பாணத்தில் குடியேறுகின்றபட்சத்தில் யாழ்ப்பாணத்தின் செல்வம் யாழ்ப்பாணத்துக்குள்ளேயே தங்கும் என்பதில் சந்தேகமில்லை.

## உசாத்துணைகள்


[1]. Abeyasinghe, T.B.H., "Muslims in Sri Lanka in the sixteenth and seventeenth centuries", Muslims of Sri Lanka, Avenuess to Antiquity.

[2]. அப்துல்ரஹீம், எம்.எஸ்., யாழ்ப்பாணமுஸ்லிம்கள் வரலாறும் பண்பாடும், இஸ்லாமிய இலக்கியக் கழகம், யாழ்ப்பாணம், 2008.

[3]. அப்துல்ரஹீம், எம்.எஸ்., ஐரோப்பியர் ஆட்சியில் யாழ்ப்பாண முஸ்லிம்கள், வடக்கு கிழக்கு மாகாணசபை, கொழும்பு, 1998.

[4]. அருந்தவராஜா, க., ஈழகேசரி காட்டும் ஈழத்தமிழர் சமூக அரசியல் வரலாறு, முதுதத்துவமாணி பட்டத்துக்காக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டது. (பிரசுரிக்கப்படவில்லை).

[5]. அஸீஸ், ஏ.எம்.ஏ., இலங்கையில் இஸ்லாம், கலைவாணி புத்தகநிலையம், யாழ்ப்பாணம்.

[6]. குணசிங்கம், மு., இலங்கைத் தமிழர் முழுமையான வரலாறு, எம்.வி.பப்ளிக்கேசன், சிட்னி, 2008.

[7]. குணராசா, க., யாழ்ப்பாணவைபவமாலை – மீள்வாசிப்பு, கமலம் பதிப்பகம், யாழ்ப்பாணம், 2001.

[8]. மன்சூர் மொகமட் பாஸிஸ்," இலங்கையின் இனத்துவப் பிணக்கில் முஸ்லிம் காரணி", பல்வகையினைக் கையாளுதல், சர்வதேச உறவுகள் நிலையம், நெதர்லாந்து.

[9]. முகமது சமீம்., ஒரு சிறுபான்மை சமூகத்தின் பிரச்சினைகள் 1900-1948, குமரன் வெளியீடு சென்னை, 1998.

[10]. பத்மநாதன், சி., இலங்கைத் தமிழர் தேசவழமைகளும் சமூகவழமைகளும், குமரன் பதிப்பகம், கொழும்பு.

[11]. Pieris, P.E., Ceylon and the Hollanders (1658–1796), Navrang, New Delhi, 1995.

[12]. றமீஸ் அப்துல்லாஹ்., "கிழக்கிலங்கை இனங்களுக்கிடையிலான உறவுகள்", பல்வகையினைக் கையாளுதல், நெதர்லாந்து.

[13]. இராசநாயகம், செ., யாழ்ப்பாணச்சரித்திரம், ஏசியன் எடுகேசனல் சர்வீசஸ், சென்னை, 1999.

[14]. தனபாக்கியம், கு., இலங்கையில் தொல்லியல் ஆய்வுகளும் திராவிடர் கலாசாரமும், மணிமேகலைப்பிரசுரம், சென்னை, 2001.

[15]. விக்ரர், முஸ்லிம் தேசமும் எதிர்காலமும், மூன்றாவது மனிதன் வெளியீட்டகம், அக்கரைப்பற்று, 1997.